திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து நமது அரசாங்கத்திற்கு இலவசமாகக் காகிதம் தந்து இருக்கிறார்களே, அதன் காரணமாகப் புத்தகங்களின் விலையை மலிவாக நிர்ணயித்துக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வெளிநாட்டிலிருந்து இலவசமாகக் காகிதம் கொடுக்கப்பட்டது ஒரு காலத்திலே, இன்று கொடுக்கப்படவில்லை. அப்படிக் கொடுக்கப் பட்ட காகிதத்தின் மூலமாகக் கிடைத்த தொகை மதிய உணவுக் கென்று கொடுத்து விட்டார்கள். இப்போது அதைப்போல் கொடுத்தால், மலிவான முறையில் புத்தகங்கள் கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், புத்தகங்கள் வெளியிடும் போதாவது, லாட்டரி சீட்டு அடிப்பதை நிறுத்தினால் அதிகமான புத்தகங்கள் அச்சடிக்க ஏதுவாக இருக்காதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புத்தகங்களை வெளி அச்சகங்களில் அச்சடிக்கலாம். ஆனால் லாட்டரி சீட்டுக்களை வெளி அச்சகங்களுக்குக் கொடுக்க முடியாது. லாட்டரி சீட்டு அரசு அச்சகத்தில்தான் அச்சடிக்கப்பட வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Hon. Minister for Education aware that during 1968–69 the Corporation of Madras distributed free books to all the poor students and subsequently the Government ordered that no books should be distributed to the students of the Corporation schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இது மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லையென்றாலும், இது பற்றி கார்ப்பரேஷன் முடிவு செய்யவேண்டும். கார்ப்பரேஷனின் நிதிநிலை அறிக்கையைப் பொறுத்து அவர்கள் முடிவு செய்வார்கள். முதலிலே, 3-வது வகுப்பு வரை கொடுத்தார்கள். பின்பு 8-வது வகுப்பு வரை கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நிதிநிலை சரியாக இல்லாததால்,—ஏற்கெனவே, பல்வேறு வகையில் அரசாங்கத்திடமிருந்து கடன் எதிர்பார்க்கிறது—இலவச புத்தகம் வழங்குவதை ஏற்றுக்கொண்டு போகமுடியாது. தனிக்கேள்வி போட்டால் முழு விவரம் சேகரித்துத் தரப்படும்.

Starting of industries in Dharmapuri District

*9 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey has been made in Dharmapuri district by the Government of Tamil Nadu regarding the availability of any raw materials for starting industries; and

(*b*) if so, the nature of industries that will be started?

1971 ஜூன் 21]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, we recently conducted an Industrial Seminar at Dharmapuri to improve and develop industries there and the Hon. Minister for Industries was also there. Unless we know the availability of materials in the district, it is difficult to find out the nature of industries that could be set up there. Therefore, may I know what steps the Government are going to take to find out the availability of minerals there?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கம் செய்யவில்லை என்று நான் முன்பே கூறினேன். ஆனால், ஸ்மால் இன்டஸ்டிரீஸ் சர்வீஸ் இன்ஸ்டியூட் சார்பாக ஒரு சர்வே அங்கே நடத்தப் படுகிறது. 12 தொழில்கள் அங்கே தொடங்கலாம் என்று அறிக்கை தந்து இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், ஜியாலஜி துறையினர் மாநிலம் முழுவதிலும் ஆராய்ச்சியைத் தொடங்கி இருக்கிறார்கள். தர்மபுரியில் நடத்தப் படும்போது அதனுடைய விவரம் அளிக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அரசாங்கம் செய்யவில்லை தொழில் அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து தொழில்கள் ஆரம்பிக்க லைசென்சு வரவில்லை என்று சொல்லு கிறார்கள். எல்லாத் தொழில்களுக்குமே மத்திய அரசாங்கத்திலிருந்து லைசென்சு வரவேண்டுமா? அல்லது, எந் தெந்த தொழில்களுக்கு மத்திய அரசாங்கத்திலிருந்து லைசென்சு வரவேண்டுமென்று கூற முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : லைசென்சு கொடுக்கப்பட வேண்டிய பொறுப்பு மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. நாமே பல்வேறு தொழில்கள் ஆரம்பிப்பதற்காக லைசென்சு கேட்டு இருக்கிறோம். தனியார் சார்பிலும் கேட்கப் பட்டு இருக்கிறது. அரசாங்கத்தின் சார்பில், தொழில் தொடங்குவதற்காக உரிமை வழங்கும் பொறுப்பு மாநிலங்களுக்குத் தரவேண்டுமென்று சுட்டிக்காட்டி வருகிறோம். அது நல்லது என்று கருதி அம்மையார் அவர்களும் சேர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Will the Hon. Minister explain whether there is any licence needed for any industry with a capital of less than Rs. 1 crore or any licence is needed only if there is foreign exchange involved? May I know whether for starting of industry with a capital of less than Rs. 5 crores any licence is needed? If so, what are the difficuties in getting such a licence? Will the Hon. Minister explain the position?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தர்மபுரியிலே கிடைக்கின்ற பொருள் பற்றியும், உற்பத்திக்கு என்ன என்ன பொருள் கிடைக் கிறது என்பது பற்றியும், என்ன என்ன தொழிற்சாலை ஆரம்

[1971 ஜூன் 21

பிக்கலாம் என்பது பற்றியும் மூலவினாவில் கேட்டிருக்கிறார்கள். அரசின் தொழிற்கொள்கைபற்றி கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள், அவர்களே விடையும் தந்திருக்கிறார்கள். ரூபாய் ஒரு கோடிக்குள்ளாவது லைசென்சு வழங்க அனுமதி வேண்டு மென்று முதலமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி அறிவித் தார்கள், அப்படி அறிவித்ததற்குப் பின்னாலே கனம் அங்கத்தினர் அவர்கள் 'ஃபாரின் எக்சேஞ்சு' முதலமைச்சர் கேட்கவேண்டு மென்று 'புரோவிசோ' போட்டிருக்கிறார்கள். அனுமதி கேட்க வேண்டுமென்று சொல்லிவிட்டு பெரும்பாலும் அனுமதிக்கு மத்திய சர்க்காரிடம் நாம் தவம் கிடக்கின்ற நிலையிலேதான் இன்றைய கொள்கை இருக்கின்றது என்றும் சொல்லுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சிறு தொழில்கள் ஏராளமாக இந்த ராஜ்ஜியத்தில் ஏற்படுத்தவேண்டுமென்று தொழில் அமைச்சர் கேட்டிருக்கிறார்கள். ஆனால் எந்தெந்தப் பகுதியில் என்னென்ன மூலப்பொருள் கிடைக்கும் என்பதை ஆராய்ந்து தொழில் உற்பத்தி பெருக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனிப்பொருளைப் பொறுத்த வரையில் அது பற்றி புவி இயல் ஆராய்ச்சித்துறை ஆராய்ந்து வருகிறது. சிறு தொழில் பெருக, சிறு தொழில் வளர்ச்சி வாரியம் என்ற ஒன்றை ஆரம்பித்து பல மாவட்டங்களில் குழுக்கள் அமைத்து அந்த அமைப்பின் மூலமாக சிறு தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான மூலப்பொருள்கள் தேடித் தருவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, லைசென்ஸ் பெறுவதிலும் எலெக்ட்ரிசிட்டி பெறுவதிலும் ஏற்படும் சிரமத்தின் காரணமாகப் பலர் சிறு தொழில்களில் முதலீடு போடுவதற்குத் தயங்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே பஞ்சாப் போன்ற மாநிலங்களில் சிறு தொழில் தொடங்க என்ன என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய அரசாங்கமும் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே இரட்டிப்பாக சிறு தொழில்கள் பெருகியிருக் கின்றன என்பதைத் தமிழ் நாட்டுப் புள்ளி விவரம் எடுத்துக் காட்டுகிறது. தொழில் தொடங்க அனுமதி கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுமானால் அதைத் தவிர்க்கவேண்டுமென்று ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அது மின்சாரத்துறையிலேயோ மற்ற துறை யிலேயோ காலதாமதம் ஏற்பட்டால் அதன் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு உடனடியாகப் பரிகாரம் காண முயற்சி எடுக்கப்படுகிறது. அந்தக் குழுவின் சார்பில் ஏராளமான

1971 ஜூன் 21]

யோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. பஞ்சாபிலே எப்படி நடைபெறுகிறது என்பதை ஆராய்ந்து முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கியிருக்கிருர்க. "ஃபாக்டரி ஆக்ட்ஸ், லேபர் லெஜிஸ்லேஷன்" இவற்றை யெல்லாம் இலகுவாக ஆக்கினுல் ஏராளமான தொழிற்சாலைகள் அமைக்கப்பட முடியும் என்று கருதப்படுகிறது. கனம் அங்கத்தினர் தொழிற்சங்கத் தலைவர், அப்படிப்பட்ட சட்டம் வரும்போது ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஏராளமான சிறு தொழில்கள் ஏற்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினுர்கள். புள்ளி விவரத்தைக் கணக்கிடும்போது மூலப்பொருள் விநியோகத்தைக் கொண்டு மட்டும் கணக்கிடாமல் அந்த மூலப்பொருளை வாங்கித் தொழிற்சாலை தொடங்கினவர்கள் கணக்கையும் உற்பத்திப் பெருக்கத்தையும் பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் உற்பத்தி மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே, உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலை எவ்வளவு, எந்த அளவை வைத்துப் புள்ளி விவரம் கணக்கிடப்படுகிறது என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு வாரியம் இருபற்றி ஆராய அமைக்கப்பட்டது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் இத்தகைய தவறுகள் நடக்காமல் தடுக்கவேண்டுமென்று ஒரு விசாரணை நடந்தப்பட்டது. யார் யார் தவறு செய்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, சிறு தொழில்களுக்கு மின்சாரம் போன்ற வசதிகள் அளிப்பதிலே அரசாங்கம் ஏதாவது சலுகை தரமுடியுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னென்ன சலுகை என்பது தான் பிரச்சினையாக இருக்கிறது . . .

நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன்

10 **வின.—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் தமிழ்நாடு அரசுக்கு எந்த அளவுக்கு நிர்வாக அதிகாரம் உள்ளது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திட்டம் நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷன் லிமிடெட் என்ற மத்திய அரசாங்கத்தின் முழு அதிகாரத்துக்குட்பட்ட நிறுவனத்தின் பொறுப்பில் உள்ளது. அதன் இயக்குனர் குழுவில் தமிழ்நாட்டு அரசின் இரு பிரதிநிதிகளாக நிதி, தொழில் துறைகளின் காரிய தரிசிகள் அங்கம் வகிக்கிருர்கள்.